மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# ‘உறவுகள்’ மரபு கவிதைத் தொகுப்பு நூலில் காணப்படும் பெண்ணியச் சிந்தனைகள்

# Feminism thoughts in a traditional poem book titled ‘Uravugal’

சீனிவாசன் ரெட்டி சந்திரன்/ Seeniwasan Redi Sandran[1]
[1]M. Ed. Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: seeniwasanSR@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

‘உறவுகள்’ மரபு கவிதைத் தொகுப்பு நூலில் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்தல் என்பதே ஆய்வின் நோக்கமாகும். பெண்கள் மீது வைக்கப்பட்டிருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளையும் கருத்துப் போக்குகளையும் மாற்ற வேண்டும் என்ற நோக்கில் பேசுவதும் எழுதுவதுமே பெண்ணியச் சிந்தனையாகும். பெண்ணியச் சிந்தனைகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை தமிழ்நாட்டு இலக்கியச் சூழலில் கவிதைகளிலும் மலேசிய இலக்கியச் சூழலில் சிறுகதைகளிலும் மையப்படுத்தி உள்ளன. அதனால், இலக்கியச் சூழலிலும் இலக்கிய வகையிலும் ஆய்வாளரின் ஆய்வு முன்னாய்வோடு வேறுபடுகின்றது. மலேசியக் கவிஞர் ஆதம் குமார் என அறியப்படும் அப்துல் ஹாதீ அவர்கள் மரபு கவிதைகள் இயற்றுவதில் நல்லாலுமை பெற்றவர். பெண்களின் வாழ்வியல் நலனிலும் எதிர்காலத்திலும் அக்கறை கொண்டவர் என அவருடைய கவிதைகள் சான்று நிறுவுகின்றன. ஆகவே, ‘உறவுகள்’ எனும் அவருடைய கவிதைத் தொகுப்பில் பெண்ணியச் சிந்தனை குறித்த இவ்வாய்வு ஏற்றதாகவே உள்ளது. இக்கவிதைத் தொகுப்பில் உள்ள 110 கவிதைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வு கவிதைத் தொகுப்பினை முதன்மைப்படுத்தி இருப்பதால் இஃது ஒரு நூலக ஆய்வாகும். கவிதைத் தொகுப்பில் பெண்ணியம் குறித்த சிந்தனைகள் கண்டறியப்பட்டுச் சிறுதலைப்புகள் வழி பண்புசார் முறையில் விளக்கப்பட்டுள்ளன. அவை பெண்கள் பல்துறையில் துணிந்து ஈடுபடுதல், பெண்கள் விருப்பத்திற்கு மதிப்பளித்தல், ஏழைமைப் பெண்களும் வாழத் தகுதியாகுதல், பெண்களுக்கு ஆண்களுடனான பழக்கத்தில் அளவு அறிதல், பெண்கள் இடமறிந்து துணிவோடு செயல்படுதல் என்பவை ஆய்வுக் கண்டுபிடிப்பாகும். இந்த ஆய்வானது, தமிழ்க் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் குறித்து ஆய்வினை மேற்கொள்ள இருக்கும் இதர ஆய்வாளர்களுக்கு முன்மாதிரியாக அமைந்திடும்.

**கருச்சொற்கள்:** மரபு கவிதை, பெண்ணியம், சிந்தனைகள்

**Abstract**

The objective of this research is to investigate feminism thoughts from the traditional poem book "Uravugal". Feminism thoughts is speaking and writing with the aim of changing the social restrictions and stereotypes placed on women. Although there is no further research on feminism thoughts but in Tamil Nadu literature the topic has been discussed through poems and have developed through short stories in Malaysian Tamil Literature. Therefore, in terms of vortex of literature and its types the researchers' research are differ with the past studies. Malaysian poet Abdul Hathi who is known as Adam Kumar is well known for his poems. He is a person whom cares about women's empowerment and future, this is proven through his evidences which is his poem. So, based on his poem "Uravugal", this poem touches feminism thoughts. About 110 poems have been used for this research from the book titled "Uravugal". This research is carried out through library research and explained in qualitative method which comprises the involvement of women in various fields, the respect given for women's opinion, poor women have equal and same rights like other, the boundaries between women and men, and the boldness of women and their behaviours according to the place, are the findings of this research. This research would be useful if future researchers want to do further research on feminism thoughts.

**Keywords:** traditional poem, feminism, thoughts

**முன்னுரை**

20 ஆம் நூற்றாண்டில், மலேசியத் தமிழ் இலக்கியச் சூழலில், மரபு கவிதை வளர்ச்சிக்குக் கவிஞர்கள் பலர் பங்காற்றினர். அவர்களுள், ம.அ. அப்துல் ஹாதி எனும் இயற்பெயர் கொண்ட கவிஞர் ஆதம் குமார், 'உறவுகள்' எனும் தலைப்புக் கொண்ட மலேசிய மரபு கவிதைத் தொகுப்பு நூலை எழுதிட்டார். இந்நூல், 1979 ஆம் ஆண்டு முதற்பதிப்பாகி ஷாயிர் பதிப்பகத்தால் வெளியீடு ஆனது. உறவு எனும் கருப்பொருளில், பதினொன்று வகை உறவுகளைச் சிறுதலைப்புகளாக அமைத்து, அவற்றின்கீழ் நூற்றுப்பத்துக் கவிதையினைப் புனைந்துள்ளார். அவை இறையுறவு, நாட்டுறவு, மொழியுறவு, நெறியுறவு, மணவுறவு, மகவுறவு, காதலுறவு, இணையாவுறவு, நீங்காவுறவு, வேண்டாவுறவு, வாழ்கையுறவு ஆகும். இதில் பெண்ணியம் குறித்துப் பல நிலைகளில் பேசப்பட்டிருப்பதால், கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்வதை முதன்மை நோக்கமாக இவ்வாய்வு கொண்டுள்ளது.

**ஆய்விலக்கிய மீள்நோக்கு**

'பெண்நிலைவாதம்' என்பது சமூகவியல் நோக்கிலும் 'பெண்ணியம்' எனுஞ்சொல் ஆய்வு நோக்கிலும் ஆளப்படுகின்றன (அன்புசிவா,2018). பெண்ணியம் என்பது சமூகத்தில் பரவலாகப் விவாதிக்கப்பட்டுப் பேசப்படுகின்றன தத்துவமாகும். பெண்கள்பால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு முடிவாகத்தான் உலகம் முழுவதும் பெண்ணியம் ஓர் இயக்கமாகச் செயற்பட்டு முறையான உரிமைகளுக்குப் போராடுகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில்தான் உலகெங்கிலும் பெண்ணியம் தொடர்பான எதிர்ப்புக் குரல்கள் எழுந்த வண்ணமிருந்தன (சரசுவதி உலகன் & மனோன்மணி தேவி, 2019). பெண்ணியம் என்பதற்குப் பாலியல் சமத்துவம், ஆணுக்கு நிகரானவள், எக்காலத்திலும் அடக்கி வைக்கப்படக் கூடியவளல்லள், பெண்களின் சமூகத்தை மீட்டெடுப்பது போன்ற விளக்கங்கள் அனைத்தும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் அளிக்கும் கருத்துகளாகும் (சாரதம்பாள்,2005).

தமிழ் இலக்கியச் சூழலில் பெண்ணியச் சிந்தனை ஒட்டி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மலேசிய இலக்கியச் சூழலில், சு.கீதா & சு.மணிமாறன், ந.மகேஸ்வரி படைத்த சிறுகதைகளில் பெண்ணியம் குறித்து ஆய்வினை நிகழ்த்தியுள்ளனர். அடுத்து, சரண் சுக்லாம் ஆத்மலிங்கம் & மனோன்மணி தேவி அண்ணாமலை, கவித்தூறல் மலேசியக் கவிதைத் தொகுப்பு நூலில் சூழலியல் கோட்பாடு பற்றிய ஆய்வினில், சூழலியப் பெண்ணியம் குறித்து ஒரு சிறு பகுதியாக ஆய்ந்துள்ளனர். தமிழ்நாட்டு இலக்கியச் சூழலில், ப.இளங்கோ, வைரமுத்துவின் கவிதைகளிலும், சே.சித்ரா, பெண் கவிஞர்களின் கவிதையிலும் பெண்ணியச் சிந்தனை குறித்து ஆய்ந்துள்ளனர். மேற்காணும் முன்னாய்வுகள், இலக்கியச் சூழலிலும் இலக்கிய வகையிலும் ஆய்வாளரின் ஆய்வோடு வேறுபடுகின்றன.

**தரவுப் பகுப்பாய்வு**

**பல்வேறு துறைகளில் பெண்கள் துணிந்து ஈடுபட வேண்டும்**

நவீனத்தை நோக்கி உலகம் செல்ல, புதிய துறைகள் ஆங்காங்கே தோன்றுகின்றன. பல துறைகள் வெற்றி பெற, சிறந்த அறிவையும் சிந்தனையையும் வரவேற்கின்றனர். பெண்களும் உலகத்தோடு பொருந்திப் பல துறைகளில் முயன்று ஈடுபட்டு ஆற்றலை வெளியிடுதல் சிறப்பாகும். ஆண்கள் போல் பெண்களும் துணிந்து பல்துறையில் ஈடுபட வேண்டும் என்பதைக் கவிஞர்,

> "துறைகள் தோறும் ஆணும் பெண்ணும்
> துணிந்த சேவை செய்குவோம்!"
> (ஒளிருவோம்! – பக்கம் 39)

எனும் வரிகள் வழி உணர்த்துகிறார். இதன்வழி, நாட்டுக்குச் சேவை செய்தும், அதே சமயம் பெண்கள் தங்களைத் துறைகள் தோறும் வளர்த்துக் கொள்ள இயலும் எனும் நற்சிந்தனையை உணர்ந்திட வேண்டும்.

**பெண்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்க வேண்டும்**

மனம் என்பது இருபாலினருக்கும் பொதுவாகும். மனத்தில் எழும் விருப்பத்திற்கு மதிப்பளித்தால்தான் அவரவர் எண்ணங்களையும் கருத்துகளையும் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும். கல்வி, தொழில், திருமணம் எனும் நிலைகளில் வாழ்வினை அமைக்கும் முறை குறித்துப் பெண்களுக்குத் தனித்த விருப்பம் இருக்கும். விருப்பம் என்பது இருந்தால் அது பெண்களுக்கும் உரியது என்று,

> "விருப்புக்கு இடமுண்டு எனினும் - பெண்ணின்
> விருப்புக்கும் இடமுண்டு ஆங்கே"
> (மணவாழ்க்கை – பக்கம் 74)

எனும் வரிகள் வழி, கவிஞர் தமது சிந்தனையை வெளிக்காட்டுகிறார். பெண்களின் விருப்பத்தில் குறைகள் இருப்பின் அதை முயன்று மேம்படுத்தவே வேண்டும்; முழுவதும் முட்டுக் கட்டையாக இருத்தல் இழிவாகும்.

**ஏழைமைப் பெண்களுக்கு வாழத் தகுதியுண்டு**

இன்றும் சமூகத்தில் ஏழைமை நிலை இழிவாகவே எண்ணப்படுகின்றது. அதுவும், ஏழைப் பெண்கள் என்றால் நிலைமை இன்னும் கேடாகும். இவ்வாறு, சமூகத்தின் சிலர் பார்வை பரவிப் பொதுப் பார்வையாகி விட்டதை மறுக்க இயலாது. ஏழைப் பெண்களும் வாழத் தகுதியுடைவர்கள் என,

"எளியவள் என்பதால் வெறுத்து - உலகில்
இறந்தவ ளாய்ச்செய்ய லாமோ?
(அவள் – பக்கம் 71)

கவிஞர் சமூகத்திடம் தமது கேள்விதனை எழுப்புகிறார். எத்தனையோ பெண்கள் ஏழைமை நிலை கடந்து கல்வி, தொழில், விளையாட்டு போன்று சாதனை அடைந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, விளையாட்டுக் காலணியின்றி வெறுங்காலோடு ஒடி அனுபவம் கொண்ட 'டீத்தீ சாண்ட்' எனும் பெண், நேப்பாலில் நிகழ்ந்த அனைத்து நாடு இரீதியிலான ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்றுள்ளார் (India Today,2019). ஏழைமை மட்டுந்தான் தடையே தவிரப் பெண்களின் முயற்சிக்குக் கிடையாது.

**பெண்களுக்கு ஆண்களுடனான பழக்கத்தில் அளவு வேண்டும்**

இன்றைய சூழலில், பாதுகாப்பு என்பது அவசியமே. அதிலும், பெண்களுக்கு அது பல மடங்கு தேவைதான். நட்பு என்று பெண்கள் பழகினாலும், இன்னொரு புறத்தில் இருக்கும் ஆண்களும் அவ்வாறு எண்ணிட்டால் சிக்கல் இல்லைதான். ஆனாலும், ஏற்ற சமயம் பார்த்துத் தங்களுடன் நெருங்கிப் பழகும் பெண்களின் வாழ்வினில் கேட்டை விழைக்க ஆண்கள் பலர் எண்ணிடுவது வழக்கமாகி விட்டது. இதைத்தான் கவிஞரும்,

"பருந்தாக உனைச்சுற்றும் ஒரு கூட்டமே!
பணிந்தோரைச் சுவைபார்த்தல் அவர்நாட்டமே!
விருந்தாக நீவீழ்ந்தால் பலவீனமே!
விளைவாக்கும் பழியோடு அவமானமே!"
(இளங்கன்னியே – பக்கம் 91)

எனும் வரிகள் வழி, பெண்ணினத்திற்கு அறிவுரை வழங்குகின்றார். இவ்வரிகள் வழி, உவமைச் சிறப்போடு செயலையும் அதன் விளைவையும் பெண்களுக்கு அறிவுறுத்தும் கவிஞர் திறம் பாராட்டுக்குரியதே.

**பெண்கள் இடமறிந்து துணிவொடு செயல்படுதல் வேண்டும்**

பெண்களுக்குத் துணிவுக் குணம் வாழ்வில் கொள்ள வேண்டிய ஒன்று. துணிவு இருந்தால்தான் வாழ்வில் வரும் சவால்களை எதிர்நோக்க இயலும். இருந்தாலும், அந்தக் குணத்தைத் பொருத்தமற்ற வழியில் கொண்டு செயற்படுவதுதான் தவறாகும். பொருத்தமற்ற சூழலில், பெண்கள் துணிந்தால் கேடு விளையுமெனக் கவிஞர் கூறுகின்றார். அச்சிந்தனையை,

"தோட்டம் திறந்தால் மாடுவரும்! –
துணிவாய் நடந்தால் கேடுவரும்!"
(திறந்த தோட்டம் – பக்கம் 111)

எனும் வரிகளில் உய்த்துணரலாம். இதே கவிதையில், உடைகளை அரைகுறையாய் அணிதல்; அடக்கமற்று இருத்தல்; அறிவுரைகள் கேளாமல் சுயமாய்ச் செயற்படுதல் போன்ற பொருத்தமற்ற பெண்களின் துணிவை எடுத்துக் காட்டியுள்ளார். ஏற்ற இடத்தில் பெண்கள் துணிந்தால் நன்மைதானே கிடைக்கும்.

## நிறைவுரை

'உறவுகள்' மலேசிய மரபு கவிதைத் தொகுப்பில் பல பெண்ணியச் சிந்தனைகள் பரவலாகக் காணப்படுகின்றன. கவிஞர் ஆதம் குமார் அவர்கள் பெண்கள் மீது கொண்டிருக்கும் நற்சிந்தனைகளைப் பல கவிதைகளாகப் புனைந்துள்ளார். இதனை இவ்வாய்விலேயே சான்றுகளாக அளிக்கப்பட்டுமுள்ளன. பெண்களின் உரிமைகள்; பெண்கள் கொள்ளக் கூடிய சிந்தனைகள்; பெண்கள் கொள்ளக் கூடாச் சிந்தனைகள் எனப் பல கோணங்களாகப் பெண்ணியச் சிந்தனைகளைப் பகுத்துக் காட்டியுள்ளார். இவை போன்ற சிந்தனைகளைக் காணும்போது இவை மிகுதியாக மிதவாதப் பெண்ணியமாகவே உள்ளன. மேலும், பெண்ணியச் சிந்தனை என்பது பெண்களிலிருந்து மட்டும் இல்லாமல் சமுதாயத்தினரிடையும் இருக்க வேண்டும் என்பதை அறிய இயலுகின்றது.

## துணைநூற்பட்டியல்

National Sports Day:5 women athletes who made India proud in 2019 (2019,August 29), India Today. Retrieved from https://www.indiatoday.in/education-today/gk-current-affairs/story/indian-women-athletes-gold-medals-1593068-2019-08-29

அப்துல் ஹதி,ம.அ. (1979). உறவுகள். ஷாயிர் பதிப்பகம்.

அன்புசிவா,பூ.மு. (2018). கவிஞர் இரா. காமராசுவின் கவிதைகளில் பெண்ணிய நிலையும் ஆளுமைக் கோட்பாடுகளும். சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 2(3), 15-21.

சரசுவதி, உ & மனோன்மணி தேவி, அ. (2019). ''வாராயோ வெண்ணிலாவே'' சிறுகதைத் தொகுப்பில் பெண்ணியச் சிந்தனைகள். செம்புலம்,7(23),153-157.

சாரதம்பாள், செ. (2005). பெண்ணியம் உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.